**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No.07/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of LW 9 | | | Additional witness Examined as : PW 4 | | |
| Name | : | அகோரம் | Defence | : | |
| Father Name | : | பஞ்சு | Court | : | |
| Village | : | உதவி ஆய்வாளர், செம்பனார்கோவில் காவல் நிலையம். | Taluk | : | |
| Calling | : | | Religion | : | |
| Age | : | 56 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 24.09.2024

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளாராக பணிபுரிந்து வருகிறேன். என்னோடு பணிபுரிந்த வகையில் உதவி ஆய்வாளர் அறிவழகன் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும் ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த02.07.2018 ஆம் தேதி இரவு 23.30 மணிக்கு செம்பனார்கோவில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அறிவழகன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஜெயராமன் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலைய குற்ற எண் 240/2018 இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324,

506(ii) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கினை பதிவுசெய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலியமூர்த்தி, சாருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி குற்ற சம்பவம் புரிந்தது உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரி நாகப்பட்டினம் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை.

இவ்வழக்கில் காயம் பட்ட அசா1 மற்றும் அசா2ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனலெட்சுமி அவர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலத்தினையும், காயச்சான்றிதழினையும் பெற்றார். **அந்த ஒருங்கிணைந்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கின் எதிரியின் மீதான விசாரணையை முடித்து 17.10.2018ஆம் தேதி இதச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(ii) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் நேரடி விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ சாட்சிகளை விசாரிக்காமல் எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.